அதிபர்கள் அங்கே போய் அதிலே பணத்தை செலவு செய்து காரியங்களை ஆற்றியதற்குப் பிறகு அரசாங்கம் தன்னுடைய தொழில் கொள்கையை மாற்றிக்கொண்டு அந்த உத்தரவினைத் திரும்ப பெறுவதுபோல நடைபெறுவது என்னுடைய தொகுதியில் இருக்கிறது. அது அமைச்சர் அவர்களுக்கும் தெரியும் என்று நினைக்கிறேன். அப்படிப்பட்ட சூழ்நிலைகளை தடுக்கின்ற முயற்சி இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட, கொள்கையை மாற்றிக்கொண்ட செய்திகள் எனக்குத் தெரியாது. ஏற்கெனவே 3 இடங்கள் உங்களுடைய மாவட்டத்திலே அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அம்மையாருடைய தொகுதியிலே இல்லாதது அம்மையாருக்கு குறைதான். நாளா வட்டத்திலே நிறைவு செய்ய முயற்சிக்கலாம்.

வெல்லம்பட்டி பகுதியில் இரும்புத்தாது.

762—(*வினா எண். 6111) **மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்:** பேரவை துணைத் தலைவர் மாண்புமிகு தொழிற் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணா மாவட்டம் வேடசந்தூர் வட்டம் வெல்லம்பட்டி பகுதியில் ஏராளமான அளவில் இருப்புத்தாது கிடைப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு க. இராசாராம் : (அ) இல்லை.

(ஆ) பதில் எழவில்லை.

தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு சலுகைகள் மற்றும் ஊதியம்.

763—(*வினா எண். 3539) **திருமதி இரா. சரோஜா :** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்குக் கிடைக்கும் அனைத்து சலுகைகளும் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் நீட்டிக்கும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS